**செய்தி வெளியீடு எண்: 935** **நாள்: 18.12.2018**

**செய்தி வெளியீடு**

சென்னை, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய கூட்ட அரங்கில், **மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர் நிலோபர் கபில்** அவர்கள் தலைமையில் கட்டுமான தொழிலாளர்கள் நலவாரியத்தின் 28வது கூட்டம் 18.12.2018 அன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கட்டுமானத் தொழிலாளர்களின் குடும்பத்திற்கு குடும்ப ஓய்வூதியம் ரூ.400/–லிருந்து ரூ.500/–ஆக உயர்த்தி வழங்குதல், பணியின் போது விபத்து ஏற்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி மரணமடையும் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு பணியிட விபத்து மரணத் தொகை ரூ.5 இலட்சம் வழங்குதல், கட்டுமானத் தொழிலாளர்களுக்கு தலா ரூ.2,000/– வீதம் மதிப்புள்ள பாதுகாப்பு உபகரணங்கள் அடங்கிய பெட்டகங்கள் ரூ.5 கோடி செலவில் வழங்குதல், திறமை அங்கீகரிப்பு திறன் சான்று திட்டம் ரூ. 6 கோடி செலவில் செயல்படுத்துதல் ஆகியவை குறித்து அரசாணைகள் வெளியிடப்பட்டதற்கு வாரியத்தின் பின்னேற்பு பெறப்பட்டது.

16.05.2011 முதல் 30.11.2018 வரை 8,17,401 கட்டுமானத் தொழிலாளர்கள் புதிதாக பதிவு செய்யப்பட்டு மொத்தம் 11.9 இலட்சம் பயனாளிகளுக்கு ரூ.452.57 கோடி செலவில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் தொழிலாளர் ஆணையர் முனைவர் **டாக்டர் இரா.நந்தகோபால், இ.ஆ.ப.,** தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய செயலாளர் **திரு.ம.பாஸ்கரன்** மற்றும் வாரிய பிரிதிநிதிகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**